# ஆலயப் பிரவேச மறுப்பும் ஈழகேசரிப் பத்திரிகையும

**க. அருந்தவராஜா**

வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

*arunn.msu@gmail.com*

**ஆய்வுச்சுருக்கம்:** ஆலயப் பிரவேச மறுப்பென்பது ஈழகேசரிப் பத்திரிகை வெளிவந்துகொண்டிருந்த காலப்பகுதியில் அப்பத்திரிகை இலங்கையில் தமிழர்கள் அதிகளவு வாழ்ந்த பகுதிகளில் அவர்களது வாழ்வியலின் பிரதான அங்கங்கங்களிலொன்றாகக் காணப்பட்டிருந்தது. நுழைவு உரிமை மறுக்கப்பட்ட பிரிவினர்களுக்கு ஆதரவாக குரல் கொடுப்பதில் சில முற்போக்கு எண்ணங்கொ ண்டவர்களுடன் ஈழகேசரியும் இணைந்துகொண்டது. இப்பத்திரிகை இந்நிகழ்வினை அக்காலப் பகுதியில் மனித உரிமை மீறல்களின் ஒரு வடிவமாகவே பார்த்தது. எனவே அது எவ்வாறாயினும் ஏனைய மக்களைப் போன்று இத்தகைய மக்கள் கூட்டத்தினையும் சுதந்திரமாக ஆலயங்களுக்குள் சென்று வழிபாடு செய்வதன் பொருட்டு ஈழகேசரி போராடியது. போராட்ட நடவடிக்கைகளில் ஈழகேசரி ஈடுபட்ட சமயத்தில் அது பல்வேறு அச்சுறுத்தல்களையும் சவால்களையும் சந்தித்தது. ஆனால் இவற்றையெல்லாம் தாண்டி தாழ்த்தப்பட்ட மக்கள் என அக்காலப்பகுதியில் ஒதுக்கப்பட்ட பிரிவினர்களுக்கு தன்னாலான பணிகளை இப்பத்திரிகை மேற்கொண்டு வந்தமை அவதானிக்கத்தக்கது.

**திறவுச்சொற்கள்:** ஆலயம், ஆலயப் பிரவேசம், தமிழர், தாழ்த்தப்பட்ட மக்கள்

## 1. சாதி அமைப்பு

இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் கால் நூற்றாண்டுக்கான ஈழத் தமிழர்களது சமூக வரலாற்றினை அறிந்துகொள்ளுவதற்கு உதவுகின்ற மூலாதாரங்களில் ஈழகேசரிப் பத்திரிகையுமொன்று என்பதில் இரு வேறுபட்ட கருத்துக்களுக்கு இடமில்லை. இக்காலப்பகுதியில் ஈழகேசரி முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்திருந்த சமூகம் சார்ந்த செய்திகளில் சாதிப்பிரச்சினைகள், சைவ ஆலயங்களில் காணப்பட்ட குறைபர்டுகள், சுப்பிறீம் கோட்டு வழக்குகள், அக்கால மக்களது கல்விநிலை போன்ற செய்திகள் பிரதான இடத்தினைப் பெற்றிருந்தன. இவற்றில் சாதிப்பிரச்சினை என்பது இப்பத்திரிகை வெளிவந்த காலப்பகுதியில் ஈழத்தமிழர் மத்தியில் மிகவும் உக்கிரமடைந்த நிலையில் காணப்பட்டதனை அறியமுடிகின்றது. குறிக்கப்பட்ட பிரிவினர்களுக்கான உரிமைகள் சாதீயம் என்ற பெயரில் மறுக்கப்பட்டன. சமூகங்களுக்கிடையிலே சாதிச் சண்டைகள்கூட இடம்பெற்றிருந்தன. இவர்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகளில் சமாசனம், சமபோசனம், ஆலயப்பிரவேச மறுப்பு என்பன இவற்றில் குறிப்பிடத்தக்கன. அக்காலப்பகுதியில் மக்களைப் பிரித்தாள விரும்பிய ஒரு கூட்டமானது தம்மை உயர்வானவர்களாகவும் ஏனையோரைத் தமக்கு கீழானவர்களெனவும் சம உரிமைகள் அற்றவர்களெனவும் கருதியிருந்தது.

இந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் வளர்ச்சியடைந்திருந்த இத்தகைய சாதி முறையானது இலங்கையின் மீதும் தனது செல்வாக்கினை ஏற்படுத்தியிருந்தது. சாதியென்பதனைக் குறிப்பதற்குப் பயன்படுத்துகின்ற Cast என்ற பதமானது போர்த்துக்கேய மூலத்திலிருந்து பெறப்பட்டதே. இத்தகைய சொற் பிரயோகமானது ஆரம்பத்தில் மக்களிடையிலே காணப்படுகின்ற பிரிவுகள் ஒவ்வொன்றினையும் குறிப்பதற்கே பயன்பட்டது. இந்தியாவிற்கு வந்த போர்த்துக்கேயர் மேற்குறித்த சொற் பிரயோகத்தினைப் பயன்படுத்தியே அங்கிருந்த பல்வேறு மக்கள் கூட்டத்தினை அழைத்திருந்தமை அவதானிக்கத்தக்கது. இத்தகைய சாதி ஏற்றத்தாழ்வுகள் சமுதாயத்தின் ஆதிக்க நிலைகளை மிகவும் தெளிவாகவே எடுத்துக்காட்டிருந்தது. (இமயவரம்பன்,2000:30) பொதுவாக வட இலங்கையில் 10 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னதாக தமது அடிமைக்குடிகளுடன் தமிழகத்திலிருந்து இங்கு குடியேறிய வேளாளர்கள் எனும் பிரிவினர் அங்கு சாதீயம் இறுக்கமடைந்து காணப்பட்ட

காலத்தேய உணர்வினைக் கொண்டவர்களாகக் காணப்பட்டதனால் அதனை இலங்கையிலும் தொடர்ந்து கடைப்பிடிக்க முற்பட்டனர்.

## 2. ஆலயப் பிரவேச மறுப்பு

தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தமிழ் சமூகத்தினால் மறுக்கப்பட்ட உரிமைகளில் ஆலயப் பிரவேசத் தடையுமொன்று. 1950களின் பிற்பாடு ஓரளவு மறுக்கப்பட்ட இத்தகைய உரிமையானது அவர்களுக்கு கிடைத்திருந்தாலும் சில கிராமப் புற ஆலயங்களில் மறைமுகமாக இன்றும் இவ்வாறான கட்டுப்பாடுகள் இக்குறிப்பிட்ட பிரிவினர்களுக்கு இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இக்குறிப்பிட்ட பிரிவினர்களை சைவ ஆலயங்களுக்குள் அனுமதிப்பது மறுக்கப்பட்டிருந்தது. அவ்வாறன்றி ஒரு சில ஆலயங்களுக்குள் அவர்கள் நுழைவதற்கான அனுமதி வழங்கப்பட்டிரு ந்தாலும் ஆலயத்திற்கு வெளியில் அமைக்கப்பட்டிருந்த வெளிமண்டபத்திலிருந்தே வழிபட வேண்டியநிலை காணப்பட்டது. பொதுவாக அக்காலப்பகுதியில் இக்குறிபிட்ட பிரிவினர்களுக்குள் ஒருவன் பிறந்தால் அவனது முற்பட்ட பிறவியின் பலனால் இத்தகைய பிறப்பு ஏற்பட்டதெனவும் சமய ஆசாரத்தின் பிரகாரம் அவர்கள் ஆலயங்களுக்குள் நுழைவது தடையாகுமெனக் கருதப்பட்டது.(Abeyasekara,1989:28) திருவிழா நடைபெறுகின்ற காலங்களில்கூட ஆலயங்களுக்கு வெளியிலே கலை நிகழ்ச்சிகள் நடைபெறுவது வழமை. இத்தகைய நிகழ்வுகளைப் பார்ப்பதிலும் அவர்களுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தது. குறிப்பாக அவர்கள் இத்தகைய நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கெனத் தனியான இடம் ஒதுக்கப்பட்டு அவ்விடத்தினைச் சுற்றிக் கயிறு கட்டப்பட்டிருக்கும். இப்பகுதிக்குள் இருந்தவாறேதான் அவர்கள் குறித்த நிகழ்ச்சிகளைப் பார்வையிட வேண்டும்.

இலங்கையில் ஆலயப் பிரவேசம் மறுக்கப்பட்டிருந்தமையினை நேரிலே அவதானித்ததுடன் தான் கண்ட அனுபவத்தினை Brayan Pfafenberger என்பவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

*“ ஒரு பிரபல்யம் வாய்ந்த வர்த்தகர் வீட்டுக்கு யாழ்ப்பாணத்தில் நான் சென்றபோது உயர்குடி வேளாள வழித்தோன்றலான அவர் தன்னுடைய குடும்ப ஆலயத்திற்கு என்னை அழைத்துச் சென்றார். அப்போது பூசை நடந்தது. குளித்து முழுகி சுத்தமான ஆடையணிந்து ஆலயத்திற்குச் சென்றேன். நான் வெளிநாட்டவன் என்பதனால் சூத்திரன் என்று கூறியதன் காரணமாக கோவில் வெளிமண்டபத்தில் நிறுத்தி வைக்கப்பட்டேன். “(*Pfafenberger, Brayan,1982:62)

மேலும் இக்குறிப்பிட்ட பிரிவு மக்கள் தங்களது வீடுகளில் நடைபெறுகின்ற நன்மைகள் மற்றும் தீமைகளில் இந்துக்கள் செய்கின்ற கிரியை முறைகளை மேற்கொள்வதற்கும் தடைகள் விதிக்கப்பட்டிருந்தது. பிராமணர்களோ அல்லது வேறு யாராயினும் இக்குறிக்கப்பட்ட பிரவினைச் சேர்ந்த மக்களது வீடுகளுக்குச் சென்று இந்து மதக் கிரியைகளை மேற்கொள்ளக் கூடாது என்ற நிலைப்பாடு காணப்பட்டது. பொதுவாக உயர் வகுப்பினர்கள் எனக் கருதப்பட்டவர்களிடம் ஆரிய வழிபாட்டு நடைமுறைகளும் மற்றைய வகுப்பினரிடம் திராவிட வழிபாட்டு முறைகளும் நடைமுறையில் காணப்பட்டன. ஒதுக்கிவைக்கப்பட்ட இத்தகைய பிரிவினர் வணங்குகின்ற தெய்வங்களும்கூட இரு பிரிவினர்களுக்கு இடையிலும் வேறுபட்டிருந்தமையினைக் காணலாம். கற்கள், சூலங்கள் போன்றவற்றினை உரிமைகள் மறுக்கப்பட்ட பிரிவினர்கள் மர நிழல்களில் வைத்தே வழிபட்டனர். இவர்களிடம் மிருக வேள்விகள் மேற்கொள்ளுமாறும் பேய் பிசாசு நடனங்கள் ஆடுமாறும் கோரப்பட்டிருந்தது. இம்மக்களிடம் இயல்பாகவே காணப்பட்ட அறியாமை மற்றும் மூடநம்பிக்கைகள் என்பனவற்றினை மற்றைய பிரிவினர் சாதகமாக்கிக்கொண்டு இந்து மதத்தினது உயரிய புனித கிரியைகளுக்கோ அல்லது அதனது செயற்பாடுகளுக்கோ அவர்கள் தகுதியற்றவர்கள் எனக் கூறி அவர்களை ஒதுக்கி வைத்தனர்.(வெகுஜனன், இராவணா,1998:51)

## 3. ஈழகேசரியும் ஆலயப்பிவேச மறுப்பும்

ஈழகேசரிப் பத்திரிகை வெளிவந்த காலப்பகுதியானது ஆலயப் பிரவேசம் தொடர்பாக இரு அம்சங்களில் சிறப்பினைப் பெறுகின்றது. ஆலயங்களுக்குள் நுழைவதற்கு குறிக்கப்பட்ட பிரிவு மக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்த காலமானது அதனது ஆரம்பகாலமாகவும் இத்தகைய உரிமை வழங்கப்பட்ட காலமானது அதனது இறுதிக் காலமாகவும் அமைந்திருந்தது. அந்தவகையில் இத்தகைய பத்திரிகையானது தான் வெளிவந்துகொண்டிருந்த காலத்தில் ஆலயப் பிரவேசம் தொடர்பாகத் தோன்றிய பிரச்சினைகள் பலவற்றினைத் தனது வெளியீடுகளில் பிரசுரித்திருந்தது. அவர்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகளுக்காகப் பேராடியது. ஆலயங்களுக்குள் பிரவேசிப்பதற்கு மேற்குறித்த பிரிவினர்களுக்கு அனுமதி பிற்காலங்களில் கிடைத்தமைக்கு ஈழகேசரியும் ஒரு காரணமென்பதில் இரு வேறுபட்ட கருத்துக்கள் இல்லை எனலாம்.

‘‘புலோலியில் காவடிக் கலகம்’’ என்ற தலைப்பில் ஈழகேசரிப் பத்திரிகையில் வெளிவந்த செய்தியே ஆலயப் பிரவேச விடயந் தொடர்பாக இப்பத்திரிகையில் வெளிவந்த முதலாவது செய்தியாகக் காணப்படுகின்றது.

*‘‘ -------------- (சாதியினது பெயர் தவிர்க்கப்பட்டுள்ளது) மேள வாத்தியங்களோடு காவடி கொண்டு செல்லப் புறப்பட்டபோது வேளாளர் காவடி கொண்டு செல்கின்ற ஒழுங்கையில் கஞ்சல் போட்டும் எல்லை வேலிகளில் நெருப்பினை வைத்தும் தடுத்தனர். ஆயுதம் தாங்கிய பொலிசார் ----------------- என்ற சாதியினருக்கு காவடி கொண்டு செல்லுவதற்கு கொடுத்த அனுமதிச் சீட்டினை அழித்து அவர்களைக் காவடி கொண்டு செல்லவிடாது மறித்த பின் சனங்கள் கலைந்து போயினர்’’*(ஈழகேசரி,1930செப்ரெம்பர்03:03)

ஆலயப் பிரவேம் தொடர்பாக ஈழகேசரிப் பத்திரிகையானது தனது ஆசிரியத் தலையங்கத்தின் மூலமாகவும் வாசகர்களினால் ஆசிரியருக்கு அனுப்பி வைக்கப்படுகின்ற கடிதங்கள் ஊடாகவும் கட்டுரை வடிவத்திலும் தகவல்களை மக்களுக்குப் பரிமாறியதெனலாம். நமது அயல் நாடான இந்தியாவினை எடுத்துப்பார்த்தால் குறிப்பாகத் தமிழகத்தினை நோக்கினால் ஆலய நுழைவு தொடர்பான போராட்டங்கள் இலங்கையில் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே தோன்றியிருந் தமையினைக் காணலாம். 19ஆம் நூற்றாண்டின் அரையாண்டினது முற்பகுதிவரை தென் தமிழக வரலாறானது இத்தகைய போராட்டங்களினால் நிரம்பி வழிந்ததெனலாம். (கேசவன், கோ.1997:47) மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி கன்னியாக்குமரி ஆகிய ஆகிய மாவட்டங்களில் ஆலய நுழைவு சம்மந்தமான போராட்டங்கள் நடைபெற்று அது தொடர்பாக நீதிமன்றங்களிலும் முறையிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அங்கு நாடார்கள் எனப்பட்ட பிரவினர்களே மேற்குறித்த போராட்டங்களை முன்னின்று நடாத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. இருப்பினும் 20ஆம் நூற்றாண்டிலிருந்து அங்கே ஆலய நுழைவுப் போராட்டங்கள் பரவலாக விரிவடைந்து வந்தமையினை அவதானிக்க முடிகின்றது. பின்னாளில் உயர் சாதிப்பிரிவினர் எனப்பட்ட ஒரு பிரிவினர் போராட்டத்தினை ஆதரிக்கவும் முன்வந்தனர். ஈழகேசரியில் குருவாயூரில் மேற்கொள்ளப்பட்ட ஆலயப் பிரவேசம் (ஈழகேசரி,1933ஜனவரி01:05), திருவாங்கூரில் நடைபெற்ற ஆலயப் பிரவேசம் தொடர்பான செய்திகள்(ஈழகேசரி,1939நவம்பர்29:09) உள்ளன.

ஆனால் வடஇலங்கையினைப் பொறுத்தவரை ஆலயத்திற்குள் சகலரையும் நுழையவிடுவதென்பது பெரும் பிரச்சினையாக காணப்பட்டது. பழமையிலும் நம்பிக்கைகளிலும் ஊறியிருந்த யாழ்ப்பாண மக்களிடம் இது அக்காலப்பகுதியில் சாத்தியமற்றதொன்றாகவே காணப்பட்டது. அதேநேரத்தில் சில முற்போக்கான சிந்தனைகள் கொண்ட இளைஞர்களிடம் இத்தடையினை அகற்றுவது தொடர்பான சிந்தனைகளும் படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்தது.

1948இல் ஆலய நுழைவு விடயமாக யாழ்ப்பாண மக்களிடமிருந்த அபிப்பிராயத்தினை ஈழகேசரி பின்வருமாறு எடுத்துரைக்கின்றது.

*‘‘யாழ்ப்பாணத்திலுள்ள இந்துக்கோயில்களை ஹரிஜனர்கட்கு திறந்துவிட வேண்டுமென்ற அபிப்பிராயம் இந்துக்களின் கவனத்தினைக் கவர்ந்து வருகின்றது.*

*பழைய கொள்கையில் ஊறிய பெரியவர்களுக்கு இது மிகுந்த வெறுப்பினைத் தருகின்றது. இவர்கள் சமய விதிகட்கு இது மாறாதெனக் கருதுகின்றனர்.''*(ஈழகேசரி,1948ஏப்ரல்11:08)

இலங்கையின் வடபகுதியில் மட்டுமன்றி தமிழர்கள் அதிகளவில் வாழ்ந்துவந்த இலங்கையின் கிழக்குப் பகுதியிலும் ஆலயப் பிரவேசத்திற்குத் தடைகள் காணப்பட்டன என்பதனை ஈழகேசரிப் பத்திரிகை தருகின்ற செய்திகளின் வாயிலாக அறியமுடிகின்றது. மட்டக்களப்பில் அமைந்துள்ள மாமாங்கப் பிள்ளையார் கோவிலக்குத் தாழ்த்தப்பட்ட வகுப்பினரென ஒதுக்கப்பட்ட பிரிவினர் வழிபாடு செய்வதற்குச் சென்ற சமயத்தில் கோவில் அதிகாரிகள் சமயாசாரம் மற்றும் தேசவழமை போன்றனவற்றினைக் காரணமாகக்கொண்டு அவர்களை ஆலயத்திற்குள் நுழையவிடாமல் தடுத்த செய்தியானது சமகாலத்தில் வெளிவந்துகொண்டிருந்த இந்துசாதனம் பத்திரிகையில் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.(இந்துசாதனம்,1933பெப்ரவரி02:02)
மேற்குறித்த விடயமாகப் பாதிக்கப்பட்ட வகுப்பினர் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பானது பின்வருமாறு அமைந்திருந்தது.

*''அமிர்தகழி மாமாஙகப் பிள்ளையார் கோயிலில் நாவலடி நேசம்மா வணங்கும்போது வெளியே பிடித்துவிட்டதனால் 200ரூபா நட்டஈடு கொடுக்கும்படி மனேச்சரில் வைத்த வழக்கு விசாரணை செய்யப்பட்டு 5ரூபா குற்றமும் வழக்குடன் வழக்குச் செலவும் கொடுக்க வேண்டுமென்று எதிரிக்கு கட்டளையிட்டிருக்கின்றது''.*(ஈழகேசரி,1932மே25:03)

உயர் சமூகத்தினைச் சேர்ந்தனவாகக் கருதப்பட்ட ஒருவன் (-----------) தாழ்ந்த சமூகத்தினைச் சேர்ந்த(------------) பெண்ணணொருவருடன் இரகசியமான உறவினைப் பேணிவந்தமையினைக் காரணமாகக்கொண்டு அவனை ஆலயத்திற்குள் நுழையவிடாமல் தடுத்த சம்பவமும் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. குறித்த விடயமாக யாழ்ப்பாணம் சுப்பிறீம் கோர்ட்டில் நடைபெற்ற வழக்கில் சுப்பையா என்பவர் சாட்சியமளிக்கையில் எதிரிகள் தாழ்ந்த சமூகத்தினைச் சேர்ந்த பெண்ணுடன் உறவு வைத்திருந்ததாகவும் அவ்வூரில் உள்ள ஆலயமொன்றில் திருவிழா நடைபெற்ற சமயத்தில் எதிரிகள் கோயிலுக்குள் செல்ல முற்பட்ட சமயத்தில் தான் தடுத்ததாகவும் குறிப்பிட்டார்.(ஈழகேசரி,1937பெப்பரவரி17:07)

அவ்வாறே கொழும்பில் காணப்பட்ட முத்தவிநாயகர் ஆலயத்திற்குள் தாழ்த்தப்பட்ட மக்களைப் பிரவேசிப்பதற்கு 1933 காலப்பகுதியில் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் அது வெற்றியளிக்காமையின் காரணமாக அம்முயற்சியானது கைவிடப்பட்டது. இந்நிகழ்வானது ஈழகேசரிப் பத்திரிகை வெளிவந்த காலப்பகுதியில் ஒரு முற்போக்கான முயற்சியாகக் கொள்ளப்பட்டது.

1948 காலப்பகுதியில் யாழ்ப்பாணச் சமூகத்தவரிடம் ஆலயப் பிரவேசத்திற்கு அதரவான கருத்துக்கள் பரவலாகக் காணப்பட்ட சமயத்தில் குறித்த விடயத்தினை எதிர்க்கின்ற ஒரு பிரிவினரைப் பகிரங்கமான முறையில் கண்டனம் செய்கின்ற ஈழகேசரிப் பத்திரிகையானது ஆலயப் பிரவேசத்தினை எதிர்த்து இந்து சமயத்தினை நாடலாமென மனப்பால் குடிப்பவர்களைக் கண்டு நாம் அச்சமடையாமல் இருப்பது எப்படி என்ற வினாவினையும் அது முன்வைக் கின்றது.(ஈழகேசரி,1948மார்ச்14:06) தீண்டாமை மற்றும் ஆலயப் பிரவேசம் தொடர்பாக ஈழகேசரி வெளியிட்ட கட்டுரைகளில் சுவாமி சித்பவானந்தர் எழுதிய ஒரு கட்டுரையானது அக்காலத்தில் ஆலயப் பிரவேசத்தினை எதிர்ப்பவர்களுக்குச் சிறந்த அறிவுரையினை வழங்குகின்ற கட்டுரையாக உள்ளது. அக்கட்டுரையில் சொல்லப்பட்ட விடயங்கள் சில பின்வருமாறு உள்ளது.

*''வைத்தியசாலைகள் அமைவதெல்லம் நோயாளிகளுக்கென்றே. ஆரோக்கியமுடையவர்கள் அங்கு உழைக்கலாம். பொதுநலசேவை செய்யலாம். வைத்தியசாலைகள் தங்களுக்குச் சொந்தமானதென்று நோயாளிகளை உள்ளே நுழையவொட்டாது தடுப்பது தகாது. வெளியே விலக்கி வைத்தால் நோயாளி நோயாளியாகவே இருப்பான். இக்கோட்பாடு ஆலயங்களுக்கும் பொருந்தும்.*

*ISBN: 978-955-627-013-6*

*பாமரர்களது வாழ்க்கையினை ஆலய வழிபாடானது பண்படுத்துகின்றது. ஆலயத்திற்குச் செல்ல வேண்டாமென்று அவர்களைத் தடுப்பதற்குப் பதிலாக ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்று அவர்களுக்கு உற்சாகம் ஊட்ட வேண்டும்.(சித்பவானந்தர்*( ஈழகேசரி,1949பெப்ரவரி13:06)

1948இல் யாழ்ப்பாணத்திலுள்ள இருபாலையில் அமைந்துள்ள நாச்சிமார் கோயிலில் முற்போக்கான ஒரு நிகழ்வினை நா.அருளம்பலம் என்பவர் மேற்கொண்டிருந்தார். அங்கே அதுவரை காலமும் உயர் வகுப்பினர் (-------------) செய்துவந்த பொங்கல் விழாவிற்குப் பதிலாகத் தாழ்த்தப்பட்ட மக்கள் பொங்கல் விழாவினைச் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டது. அக்காலப்பகுதியில் இது பலராலும் பேசப்பட்டது.

ஈழத்தமிழ் மக்களைப் பொறுத்தவரை அக்காலப்பகுதியில் தங்களது நடடிக்கைகள் ஒவ்வொன்றுக்குமே அவர்கள் தமிழகத்தினையே முன்மாதிரியாகக் கொண்டிருந்தனர். இருப்பினும் ஆலயப் பிரவேச விடயத்தில் மட்டும் தனியானதொரு போக்கினைக் கடைப்பிடித்தனரென்றே கூறுதல் வேண்டும். மாகாத்மா காந்தி இறந்த சமயத்தில் கொழும்பில் காணப்பட்ட ஆலயங்கள் பல தாழ்த்தப்பட்ட சமூகத்தவர் என ஒதுக்கப்பட்டிருந்த மக்களுக்குத் திறந்துவிடப்பட்டன. அதேநேரத்தில் வவுனியாவிலும் இதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. இது இவ்வாறிருக்க காந்தியமும் காந்தியினைத் தெய்வமாக வழிபட்டவர்களும் அதிகமாகக் காணப்பட்ட வடஇலங்கையில் எதுவிதமான மாற்றங்களும் ஆலயப்பிரவேச விடயந் தொடர்பாக ஏற்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. ஏறத்தாள 25 வருடங்களின் பின்னராகவே யாழ்ப்பாணத் திலிருந்த ஆலயங்கள் பல மக்கள் எல்லோரும் வழிபடுவதன் பொருட்டுத் திறந்துவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

1956இன் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் ஆலயங்கள் சில சகல மக்களும் வழிபடுவதன் பொருட்டுத் திறந்துவிடப்பட்டன. 1956யூன்12இல் சிறுபான்மைத் தமிழர் மகாசபையினர் எனப்பட்ட அமைப்பினர் ‘‘உயர் சாதியினருக்கு வேண்டுகோள்’’ என்ற தலைப்பில் ஒரு பிரசுரத்தினை வெளியிட்டனர். இது கல்வி கற்ற சைவ சமயத்தவர்கள் மற்றும் நல்லெண்ணங்கொண்ட சில உயர் வகுப்பினர்கள் எனக் கருதப்பட்டவர்கள் மத்தியில் தாக்கங்களை உண்டாக்கியிருந்தது. இத்தகையதொரு பின்னணியிலேதான் அவர்கள் மத்தியில் ஆலயப் பிரவேச உரிமையளிக்கும் சபை என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் கோரிக்கையின் பிரகாரமும் நல்லலெண்ணங்கொண்ட, முற்போக்குச் சிந்தனைகள் கொண்ட ஒரு சில பெரியவர்கள் அமைத்த ஆலயப்பிரவேச உரிமை அளிக்கும் சபையின் முயற்சியினாலும் இத்தகைய ஆச்சரியப்படத்தக்க நிகழ்வு நடந்தேறியது. நல்லூர் கந்தசுவாமி கோயில், வண்ணார்பண்ணை சிவன் கோயில் போன்றன சகலரும் வழிபாடு செய்யும் பொருட்டுத் திறக்கப்பட்டன.(சிவலிங்கம்,க.,1968:05) வண்ணார்பண்ணையில் அமைந்துள்ள பெருமாள் கோயிலும் ஏறத்தாள இக்காலப்பகுதியிலேதான் திறந்துவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

குறித்த ஆலயங்களுக்குள் பிரவேசிப்பதற்கும் வழிபாடு மேற்கொள்ளுவதற்கும் உரிமை வழங்கிய நிகழ்வு தொடர்பாக 1956யூலை15இல் வெளிவந் ஈழகேசரிப் பத்திரிகையானது பின்வருமாறு குறித்த விடயம் தொடர்பாகத் தனது வெளியீட்டில் தலைப்புச் செய்தியினைத் தீட்டியிருந்தது.

*‘‘இறைவன் சந்நிதியில் எல்லோரும் சமமாயினர். யாழ்ப்பாணம் சாதித்துள்ள அந்தரங்கம் ஹரிஜனர் ஆலயத்திற்குள் பிரவேசித்த காட்சி’’* (ஈழகேசரி1956யூலை15:01)

தொடர்ந்து இவ்வாலயப் பிரவேச நிகழ்வு தொடர்பாக மகிழ்ச்சியடைந்த ஈழகேசரிப் பத்திரிகையானது தன்னுடைய கருத்தினைப் பின்வருமாறு தெரிவித்திருந்தது.

*‘‘உலகில் இன்றுவரை எத்தனையோ அதிசயங்கள் நிகழ்ந்துவிட்டன. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை அவை அனைத்தையும் வென்றுவிடக்கூடிய*

*அபூர்வமான சம்பவமொன்று நடந்தது. ஹரிஜனர்கட்கு ஆலயம் திறந்துவிடப்பட்டமையே அந்த அதிசயமென்று சொல்ல முடியாது. அவ்விதம் திறந்துவிடக்கூடிய அளவிற்கு யாழ்ப்பாண இந்துக்கள் மனோநிலையானது திடிரென மாற்றமடைந்துவிட்டதாலேயே தமிழகம் முழுவதும் அதிசயத்தோடும் மகிழ்ச்சிப் பெருக்கோடும் வரவேற்கின்றதென்றால் அது மிகையாகாது.''* (ஈழகேசரி1956யூலை15:01)

மேற்குறித்த தினத்தில் வெளிவந்த ஈழகேசரிப் பத்திரிகையின் பக்கங்கள் முழுவதிலுமே ஆலயப் பிரவேசம் தொடர்பான செய்திகளே காணப்படுகின்றன. குறித்த ஆலயப் பிரவேசம் வழங்கப்பட்டதில் பலரது பங்களிப்பும் இடம்பெற்றிருந்தது. அவற்றில் சிறுபான்மை தமிழர் மகா சபை, அகில இலங்கை காந்தீய சேவா சங்கம், தமிழரசுக் கட்சி, யாழ்ப்பாண சன்மார்க்க வாலிபர் சங்கம். குரும்பசிட்டி சன்மார்க்க சபை, யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ், சில பத்திரிகைகள் என்பவற்றின் பங்கானது இவற்றில் குறிப்பிடத்தக்கது.

ஆலயப் பிரவேசமானது உடனடியான பலனைத் தராதுவிட்டாலும்கூட பிற்பட்ட காலங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆலயப் பிரவேச நடவடிக்கைகளுக்கு ஓர் உந்துசக்தியாகக் காணப்பட்டது. ஆலயப் பிரவேச உரிமை வழங்கப்பட்டமையினைத் தொடர்ந்து ஆலயங்கள் உடனடியாகவே வழிபாட்டுக்கென சகலருக்கும் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது நடைபெறவில்லை. தொடர்ந்தும் பல ஊர்களில் ஆலயங்களுக்குள் பிரவேசிப்பது தடுக்கப்பட்டே வந்தது. ஆலயப் பிரவேச உரிமை மறுக்கப்பட்டு வந்ததன் விளைவாக பெரும்பாலான மக்கள் கிறிஸ்தவ சமயத்திற்கு மதம் மாறியிருந்தனர். மிசனரிமார்களினால் சாதியமைப்பினது எல்லைகளைத் தாண்டி தீண்டாமையின் கொடுமைகளை எதிர்த்து நிற்க முடியவில்லை. அங்கும்கூட சாதிபேதங்கள் பாராட்டப்பட்டன.
சமயம் மாறுகின்ற நிகழ்வுகள் தொடர்பாக 1935செப்ரெம்பர்19இல் வெளிவந்த இந்துசாதனப் பத்திரிகையில் ''தீண்டாச் சகோதரர்கட்கு வேண்டுகோள்' என்ற தலைப்பில் பல விடயங்கள் கூறப்பட்டுள்ளன. அதில் மாற்றத்தினையே தொழிலாகக்கொண்ட அந்நிய மதக்குரவர் விதிக்கும் மாயவலைக்குள் நம்மவருள் சிலர் சிக்குவதாகவும் எமது இந்து சமுதாயத்தில் சமூகக் கட்டுப்பாடுகளும் சாதிக் கொடுமைகளும் இருக்கின்றதென்பது உண்மையெனவும் இவற்றினைச் சாட்டாகக்கொண்டு இவர்கள் மத மாற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் எனவும் அது தன்னுடய கண்டனத்தினைத் தெரிவித்திருந்தது. (இந்துசாதனம்,1935செப்ரெம்பர்19) மேலும் சைவசமயத்தில் காணப்பட்ட ஆலயப் பிரவேச மறுப்பின் காரணமாக பௌத்த சமயத்திற்கு மாறிய சம்பவங்கள் தொடர்பாகவும் ஈழகேசரிப் பத்திரிகையில் செய்திகள் உள்ளன. சைவபண்டிதர் என்ற பெயரில் ஈழகேசரிப் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரையொன்றில் குறிக்கப்பட்ட மக்களிடம் பௌத்த சமயத்தினைப் பரப்பும் பொருட்டு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் பிக்கு ஒருவர் வந்துள்ளதாகவும் அவர் மேற்கொண்டு வருகின்ற மதப்பரப்பு நடவடிக்கையில் சைவ மக்களுடன் கிறிஸ்தவர்களும் மதம் மாறியதாகப் பத்திரிகையில் செய்தி வெளிவந்துள்ளது. இதே இதழில் ''மதமாற்றம் ஏமாற்றம்'' என்ற தலைப்பில் ஈழகேசரிக்கு அனுப்பப்பட்ட கடிதமொன்றில் சுமார் ஆயிரம் வரையான தமிழர்கள் பௌத்த சமயத்திற்கு மாறியதாகக் கூறப்பட்டுள்ளது. (ஈழகேசரி,1952ஒக்ரோபர்05:02)

அகில இலங்கை சைவ ஹரிஜன மகாசபையினது பொதுக்கூட்டமானது மல்லாகத்தில் 1948டிசம்பர்31இல் நடைபெற்றது. அம்மாநாட்டில் எடுக்கப்பட்ட தீரமானங்களில் இறுதித் தீர்மானமாக அமைந்தது ஆலய உரிமை கிடைக்காதுவிடின் பௌத்த சமயத்திற்கு மாறுவதென்பதாகும்.(ஈழகேசரி,1950ஜனவரி07:07). இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஆச்சரியப்பட த்தக்க மற்றுமொரு விடயம் யாதெனில் யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்த தியாகராசா என்பவர் பௌத்த பிக்குவாக மாறினாரென்பதே.(ஈழகேசரி,1957ஆகஸ்ட்15:02) தாழ்த்தப்பட்ட பிரிவு மக்கள் என்றாலே அவர்களது இயல்புகள் இப்படித்தான் இருக்குமென்று உயர் வகுப்பினர்கள் என்று சொல்லப்பட்ட மக்கள் எண்ணியிருந்தனர். அவர்கள் அசுத்தமான ஆடைகளை அணிபவர்கள். சுத்தமான ஆடைகள் அணியமாட்டார்கள், உடம்பினைச் சுத்தமாக வைத்திருப்பதில்லை, மது அருந்துதல், புலால் உண்ணுதல் போன்ற செயல்களை அவர்கள் செய்வதனால் அவர்களை ஆலயங்களுக்குள் நுழைய விடுவதில்லை

என்ற மனப்பாங்கினைக் கொண்டவர்களாக உயர் வகுப்பினர் என்று சொல்லப்பட்டவர்கள் காணப்பட்டனர்.

## 4. நிறைவுரை

ஆலயப் பிரவேச மறுப்பென்பது அந்நியராட்சி நமது நாட்டுக்குள் நுழைவதற்க முன்னதாகவே காணப்பட்டதொரு விடயம். இது சுதந்திரம் பெற்றதன் பின்னராகவும் தொடர் கதையாக இருந்து வந்துள்ளது. ஈழகேசரியினைப் பொறுத்தவரை அது உயர் வகுப்பினர் என அக்காலத்தில் கருதப்பட்ட நா.பொன்னையா அவர்களினால் ஆரம்பிக்கப்பட்டது என்பதுடன் ஆலயப் பிரவேசத்திற்கு ஆதரவாகவும் போராடியதென்பது குறிப்பிடத்தக்கது. அக்காலப்பகுதியில் வாழ்ந்த முற்போக்குச் சிந்தனையாளர்களிலொருவராகக் காணப்பட்ட நா.பொன்னையாவினது குறித்த முயற்சியானது அவர் உயிருடன் இருந்த காலப்பகுதியிலே வெற்றியடைந்தது. தற்காலத்தில் ஆலயப் பிரவேசத் தடுப்பு என்பது வெகுவாகக் குறைந்திருந்தாலும் சாதி முறை என்பது தமிழ் சமுதாயத்தில் தற்காலத்திலும் தொடர்ந்து வரும் தொடர் கதையாகவே உள்ளது.

## உசாத்துணை நூல்கள்

கேசவன்,கோ. (1977). *கோயில் நுழைவுப் போராட்டங்கள்*. விழுப்புரம் : சரவணபாலு பதிப்பகம்.

சிவலிங்கம்,க. (1968). *வட இலங்கையில் ஆலயப் பிரவேச இயக்கம்*. யாழ்ப்பாணம் : அகில இலங்கை சைவ அனுட்டான பாதுகாப்புச் சபை.

மனோண்மணி சண்முகதாஸ். (1991). *சாதியும் துடக்கும் - பண்டைத் தமிழர் தொடக்கம் யாழ்ப்பாணத் தமிழர் வரை*. சென்னை : நியூ செஞ்சரி புக் ஹவுஸ்.

வெகுஜனன், இராவணா. (1998). *சாதியும் அதற்கெதிரான போராட்டங்களும்*. யாழ்ப்பாணம் : புதிய பூமி வெளியீட்டகம்.

Abeyasekara,Vernon. (1989). *Image of Jaffna*.Colombo.

**பத்திரிகைகள்**

*இந்துசாதனம்*, வண்ணார்பண்ணை : சைவபரிபாலனசபை.

*ஈழகேசரி*, சுன்னாகம் : திருமகள் அழுத்தகம்.